

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) சென்னையில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்ளுப் பேத்தி ப்ரித்திகா ராணி, ஐ.எஃப்.எஸ். சித்தார்த் பழனிசாமி, IAS ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2024) அவரது இல்லத்தில், சென்னை, ஆயிரம் விளக்கு 113 “ஆ” பகுதி வட்டச் செயலாளர் எம்.என். விஷ்ணு – வா. சோனியா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். இம்மணவிழாவில், திருமதி துர்கா ஸ்டாலின், சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே. சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை, செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ். ராஜ், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2024) நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய 39 விடுதிகளில் தங்கி பயிலும் 2,600 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு “சாம்பியன்ஸ் கிட்” என்ற, விளையாட்டு வீரர்கள் அத்தியாவசியமாக பயன்படுத்தக் கூடிய பொருட்களின் தொகுப்பினை வழங்குவதன் அடையாளமாக 553 வீரர், வீராங்கனைகளுக்கு “சாம்பியன்ஸ் கிட்” தொகுப்பினை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து கொண்டார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2024) நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இராணிப்பேட்டை மாவட்டத்தில், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டும் பணிக்கும், மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில், 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் அகாடமி கட்டடம் கட்டும் பணிக்கும் அடிக்கல் நாட்டினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வயநாட்டில் தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது!

# நாளை வயநாடு மக்களவைத் தொகுதிக்கு இடைத்தேர்தல்!

## காங். வேட்பாளர் பிரியங்கா இறுதிக்கட்ட வாக்குச் சேகரிப்பு!

*வயநாடு, நவ. 12-*

வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்றுடன் நிறைவுபெற்ற நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தியை ஆதரித்து, ராகுல் காந்தி இறுதிக்கட்ட பிரச்சாரம் மேற்கொண்டார். அங்கு நடைபெற்ற பிரமாண்ட சாலைப் பேரணியில் இருவரும் வாக்கு சேகரித்தனர்.

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதிக்கு நாளை 13ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். வயநாடு தொகுதியில் நேற்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவுபெற்ற நிலையில், பிரியங்காவுக்கு ஆதரவாக அவரது சகோதரரும் மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தியும் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். வயநாடு தொகுதிக்கு உட்பட்ட சுல்தான் பத்தேரியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் பிரமாண்ட சாலைப் பேரணியில் ராகுல்காந்தியும் பிரியங்காவும் பங்கேற்று ஆதரவு திரட்டினர். வழி நெடுகிலும் ஏராளமான மக்கள் திரண்டு நின்று ராகுல் மற்றும் பிரியங்காவிற்கு வரவேற்பளித்து, தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

### 1992–ல் ‘தடா’ சட்டத்தைக் கண்டித்து பேரணி – அ.தி.மு.க. அரசின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்தவர்!

# ஆயிரம்விளக்கு ‘தடா’ சக்ரவர்த்தி உடல் நலக்குறைவு!

## இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதி!

*சென்னை, நவ. 12-*

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்குப் பகுதி, 111 ‘அ’ வட்டம் இரங்கூன் தெருவில் வசிக்கும் தடா. சக்ரவர்த்தி, உடல் நலம் சரியில்லாமல், சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

1992 -ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளில் ‘தடா’ சட்டத்தைக் கண்டித்து தி.மு.கழகம் ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி ஒன்றை அறிவித்திருந்தது. அப்போது அன்றைய அ.தி.மு.க. அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் இறந்து விட்டனர். அப்போது பல்லவன் பேருந்து ஓட்டுநராக இருந்த ‘தடா’ சக்ரவர்த்தியின் வயிற்றிலும் ஒரு குண்டு பாய்ந்தது. உயிருக்கு போராடிக் கொண்டிருந்த அவரை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். 1½ ஆண்டு காலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபின் உயிர் பிழைத்தார்.

அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அம் மருத்துவமனைக்கு நேரில் வந்து நலம் விசாரித்தார். மேலும் நெஞ்சுக்கு நீதி நான்காம் பாகம் - 403ஆம் பக்கத்தில் அதுகுறித்து குறிப்பிட்டு எழுதி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ‘தடா.’ சக்கரவர்த்தி உடல் நலம் குன்றி இராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை கழகத்தினர் சந்தித்து நலம் விசாரித்து வருகிறார்கள்.


